**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2023 - ம் ஆண்டு, மார்ச் திங்கள், 6 - ம் நாள், திங்கள்கிழமை.

**வ.வி.எண்.1/2022**

**இன்**

**அசல் வழக்கு எண்.85/2012**

கோவிந்தரா ... மனுதாரர் / பிரதிவாதி

/எதிர்/

1. தங்கம்
2. கணேசன்
3. ஜெகன்
4. ஜோஸ் ஜெயசீலன் ... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மனுவானது, 06.03.2023 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர். திரு.N.S.ஆறுமுகவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர். திரு. M.தங்கராஜ் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1.** இம்மனுவானது, அசல் வழக்கின் பிரதிவாதி கோவிந்தரா என்பவர், இந்த வழக்கில், ஏற்கனவே நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை தள்ளுபடி செய்துவிட்டு, புதிதாக வழக்கறிஞர் ஆணையரை நியமித்து, தாவா சொத்தினை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு பரிகாரம் கோரி, இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிர் தரப்பில், இந்த மனுவுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.S.ஆறுமுகவேல், ஏற்கனவே, வழக்கறிஞர் ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடத்தில் தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தினைக் குறித்த புவியியல் அமைப்பு மாற்றம் காணப்பட்டுள்ளது என்றும், ஆதலால், தாம் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த நீதிமன்றம், இந்த வழக்கின் தாவா சொத்தான 'B' பட்டிகை சொத்து 1 செண்ட் பூமியானது, 01.03.1994 தேதியிட்ட, ஆவண எண்.386/1994 மூலமாக பிரதிவாதியின் தந்தை செல்லப்பன், விஜயகுமார் மற்றும் பேட்ரிக் ஜூலியன் என்பவர்களுக்கு விற்கிரய ஆவணத்தின் அடிப்படையில், பெருவாரி பூமியில் இருந்து தென்கிழக்கு மூலையில், 1 செண்ட் பூமி விற்கிரயம் செய்து கொடுக்கப்பட்டதாக தெரிய வருகிறது. சொத்து விபரித்தலில், ரீ-சர்வே எண்.254/1A புல பூமியில் பெருவாரி பூமியான 1 ஏக்கர் 67 செண்ட் 750 சதுர லிங்ஸ் பூமியில், ஒரு சிறிய பகுதியான 1 செண்ட் பூமியினை விற்பனை செய்துள்ளதாக தெரிய வருகிறது.

**4.** மேலும், சொத்து விபரத்தில் எல்லைகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. ஆனால், நீள அகல அளவுகள் தெரிவிக்கப்படவில்லை. இந்த வழக்கின் பிரதான சர்ச்சை என்பது, வழக்கு 'B' பட்டிகை சொத்தாக தெரிவிக்கப்பட்டுள்ள இந்த 1 செண்ட் பூமியினைக் குறித்து தான். அதில், பிரதிவாதிகள் தங்களது சுற்றுப்புற சுவரினை கட்டி, ஏற்கனவே, பாதை அனுபவத்தில் இருந்த

பூமியில் இடையூறு ஏற்படுத்தி விட்டார்கள் என்பது தான். இந்த சூழ்நிலையில், இந்த நீதிமன்றம், வழக்கிடை விண்ணப்ப எண்ணில் தாவா 'B' பட்டிகை பூமியைக் குறித்து, தெளிவாக பிராதிற்காக வேண்டி இந்த இடைக்கால உத்தரவினை வழக்கின் அவசியம் கருதி உத்தரவிடுகிறது.

**(i).** இந்த மனுவின் மனுவாதியும், இந்த வழக்கின் பிரதிவாதி கோவிந்தரா கல்குளம் தாலுகா அலுவலகத்தில் முறையாக கட்டணம் செலுத்தி, கல்குளம் தாலுகா சர்வேயரைக் கொண்டு, இரு தரப்பினர் முன்னிலையில் முறையாக அறிவிப்பு சார்பு செய்து, வரையறுக்கப்பட்ட *survey and boundaries act* சட்ட விதிகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட நாளில், தாவா, 'B' பட்டிகை சொத்தைக் குறித்து, கல்குளம் தாலுகா சர்வேயர் உதவியுடன் இனம் கண்டு, அளந்து, அது குறித்த அறிக்கை மற்றும் வரைபடத்தினை கல்குளம் தாலுகா கள அளவர், இந்த நீதிமன்றத்தில் வரும் 10.04.2023 - க்குள் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

**(ii).** கல்குளம் வட்ட கள அளவையருக்கான தொகையான ரூ.1,250/- இந்த மனுவின் மனுதாரர், இந்த நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

**5. முடிவு :**

இந்த உத்தரவின் ஒரு நகல் கல்குளம் வட்டாட்சியர் மற்றும் கல்குளம் வட்ட கள அளவையருக்கு சார்பு செய்ய உத்தரவிடப்படுகிறது. அறிக்கைக்காக, வழக்கு 10.04.2023 -க்கு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 - ம் ஆண்டு மார்ச் திங்கள் 6 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

Copy to,

1. **கல்குளம் வட்டாட்சியர்,**
   **தக்கலை.**

2. **கல்குளம் வட்ட கள அளவையர்,**
   **தக்கலை.**

மா.உ.நீ, இரணியல்.

**<u>வரைவு/ சீரான உத்தரவு</u>**

வ.வி.எண்.1/2022

இன்

அசல் வழக்கு எண்.85/2012

தேதி 06.03.2023